### பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர்

# விடுதலைப் போராளி தீரன் சின்னமலை!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!





**சென்னை, ஆக. 5 -**

**“பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கியவர் - விடுதலைப் போராளி தீரன் சின்னமலை” என்று அவரது நினைவு நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் புகழாரம் சூட்டியுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஆங்கிலேய ஆதிக்கத்தை அசரடித்த வீர வித்து தீரன் சின்னமலை நினைவு நாள்!**

**எத்தனை முறை எத்தகு படைகளைக் கொண்டு தாக்கியும் வெற்றி கொள்ள முடியாத பெருவீரனாகப் போரிட்டவர் தீரன் சின்னமலை.**

**திப்பு சுல்தானுடன் கூட்டணி அமைத்து பிரிட்டிஷாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய விடுதலைப் போராளி.**

**நேரடியாக எதிர்கொள்ள இயலாத எதிரிகள் சூழ்ச்சியால் அவரைத் தூக்கிலிட்டாலும் அவர் புகழைத் தமிழ்நாடு போற்றிக் கொண்டே இருக்கும்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக

# அன்னைத் தமிழ்மண் காக்கப் போராடிய மாவீரர் தீரன் சின்னமலையின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பதிவு!


சென்னை, ஆக. 5-

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக அன்னைத்தமிழ் மண் காக்க போராடிய மாவீரர் தீரன் சின்னமலையின் புகழ் என்றும் நிலைத் திருக்கும் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலை தளப்பதிவு வருமாறு:

**விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள் இன்று!**

**ஆங்கிலேயே ஆதிக்கத்துக்கு எதிராக அன்னைத்தமிழ் மண் காக்கப் போராடிய மாவீரர் தீரன் சின்னமலையின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.**



**‘சென்னிமலைக்கும் - சிவன் மலைக்கும் இடையே ஒரு சின்னமலை’ என்று வீர முழக்கமிட்ட தீரன் சின்னமலையின் தியாகத்தையும் - வீரத்தையும் போற்றுவோம்!**

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத்தினர் புகழ் அஞ்சலி செலுத்துவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி., அறிக்கை!



சேலம், ஆக.5-

சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஆகஸ்ட் 7ஆம் தேதி வெள்ளிக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள். திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக, தமிழினத்தில் அழியா சொத்தாக, ஐந்து முறை தமிழகத்தின் முதலமைச்சராக, உலகமே போற்றும் பன்முகத் தலைவர் செம்மொழி நாயகராக நம் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும் நம் குடும்பத் தலைவரின் நினைவுநாள்.

தமிழே மூச்சாக தமிழர் நலமே வாழ்வாகக் கொண்டு இன உணர்வு, மொழி உணர்வு, சமூக நீதி, தீண்டாமை ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு என வராற்றில், பொது வாழ்வில் உலக அளவில் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்த நம் குடும்பத் தலைவருக்கு நினைவு நாள். மாபெரும் தலைவருடைய நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் அண்ணன் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆணைப்படி வருகிற 7ஆம் தேதி சேலம் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகம் மற்றும் கழக உடன் பிறப்புகள் அனைவரது இல்லத்தின் வாயிலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு மலர்தூவி புகழ் அஞ்சலி செலுத்திட வேண்டும். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு மறைந்தாலும் நம் நெஞ்சங்களிலும், நினைவுகளிலும் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கும் தமிழினத் தலைவருக்கு வீடுகள் தோறும் மரியாதை செலுத்திடுவோம்.

07.08.2026 தேதி வெள்ளிக்கிழமை காலை 08.30 மணியளவில் தாரமங்கலத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதுசமயம் சேலம் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாகநிலை முகவர்கள் (கூடுஹ2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (கூடுஉ), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (கூனுஹ), கழக முன்னோடிகள், மற்றும் கழக உடன் பிறப்புகள் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில் அமைதிப் பேரணி!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!



புதுக்கோட்டை, ஆக.5-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவு நாள் என்பது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர். தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூக நீதி கொள்கைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும். ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், தற்போது தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் கொண்டிருக்கின்ற கருது தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கவைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 7.8.2026 வியாழன் வெள்ளி காலை 9மணியளவில் எனது (எஸ்.ரகுபதி) தலைமையிலும், முன்னாள் அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ முன்னிலையிலும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அறந்தாங்கி அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டுச் சென்று அண்ணா சிலை அருகில் அமைக்கப்பட்டிருக்கின்ற கலைஞர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,

முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், அணிகளின் நிர்வாகிகள்

தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்நிகழ்ச்சிக்கான

அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர செயலாளர் க.ராஜேந்திரன் செய்து வருகிறார்.

---

### தர்மபுரி மாவட்டத்தில் உயிருக்கு ஆபத்தான

# நோய்களுக்கு சிகிச்சை வசதிகள் ஏற்படுத்த ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் - ஆ.மணி கேள்வி



புதுடெல்லி, ஆக.5-

தமிழ்நாட்டில், குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தில், புற்றுநோய், நரம்பியல் கோளாறுகள், சிறுநீரக செயலிழப்பு, இதய நோய்கள் உள்ளிட்ட நாள்பட்ட மற்றும் உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கான சிகிச்சையால் பொருளாதாரத்தில் பின்தங்கியோர் மற்றும் நடுத்தர வர்க்கக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் நிதிச் சுமை குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா? என்று மக்களவையில் கழக உறுப்பினர் ஆ. மணி கேள்வி எழுப்பினார்.

மேலும் அவர் இத்தகைய நோய்களுக்கு இலவசமாக அல்லது மானியச் சிகிச்சை வழங்கும் தமிழக அரசு மருத்துவமனைகள் மற்றும் மூன்றாம் நிலை (Tertiary Care) மருத்துவ நிறுவனங்களின் விவரங்கள் என்ன?கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டு வாரியாக தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை என்ன?

தமிழ்நாட்டில், குறிப்பாக தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளிகளின் நேரடி மருத்துவச் செலவைக் (OutofPocket Expenditure) குறைக்கும் வகையில்,ஒன்றிய அரசின் சுகாதாரத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளதா? இருப்பின், அதன் விவரங்கள் என்ன? என்றும்

தர்மபுரி உள்ளிட்ட போதிய மருத்துவ வசதிகள் இல்லாத மாவட்டங்களில், நாள்பட்ட நோய்களுக்குத் தேவையான மலிவு விலை பரிசோதனை வசதிகள், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சிறப்பு மருத்துவச் சிகிச்சை சேவைகளை மேம்படுத்த ஒன்றிய அரசு இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விளக்கம் அளிக்குமாறும் தருமபுரி ஆ.மணி எம்.பி.மக்களவையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ்விடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

---



திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில்பேரூராட்சி பகுதியில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பொதுமக்களுக்கு குடிநீர் வழங்காத திறனற்ற தவெக அரசு மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்தை கண்டித்து பேரூராட்சி தலைவர் மும்தாஜ் நவாஸ்கான் தலைமையில் சாலை மறியல் நடைபெற்றது. துணைத் தலைவர் சிவக்குமார் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஒரு மணி நேரத்துக்கு மேலாக முத்துப்பேட்டை பகுதி போக்குவரத்து தடை ஏற்பட்டு பரபரப்புடன் காணப்பட்டது.

---

### முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

# புதுக்கோட்டையில் அமைதிப் பேரணி! கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!



புதுக்கோட்டை, ஆக.5-

புதுக்கோட்ட வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரவாற்றில் அரசியல் களத்திலும் சட்டமன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைகள் படைத்த பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் நிளனவு நாள் என்பது மட்டு மல்லாமல் தமிழ்நாட்டு மக்கள் நினைவில் நிலை கொண்டிருப்பவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை முதலமைச்சராக இருந்து தந்தை பெரியாருடைய சமூநீதி கொள்கைக்கும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும்,

ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவமும், கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 7.8.2026 வெள்ளி காலை 9.30 மணியளவில்

அமைதி ஊர்வலம் புதுக்கோட்டைக்கு கீழ ராஜா வீதி அண்ணா சிலையிலிருந்து புறப்பட்டு கீழ ராஜவீதி வடக்கு ராஜ வீதி வழியாக மாவட்ட திமுக அலுவலகம் சென்றடைகிறது. மாவட்ட திமுக அலுவலகத்தில் உள்ள

முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. இந்நிகழ்வுகளில்

மாநில , மாவட்ட நிர்வாகிகள், முன்னாள், இன்னாள் சட்டமன்ற , நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பொறுப்பாளர்கள், ஒன்றிய, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், துணை மேயர், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி. பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், அணிகளின் நிர்வாகிகள்,

கழக முன்னோடிகள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

# திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் க.தேவராஜி அறிவிப்பு!



திருப்பத்தூர், ஆக, 4-

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை (05-08-2026) காலை 10.30 மணியளவில் வாணியம்பாடியிலுள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1.முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு புகழஞ்சலி.

2.கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.